//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No:CC.No.202/2022**

**prosecution witness: PW-3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

Accused absent.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | நந்தகுமார் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**19.03.2024**

**முதல் விசாரணை:-**

நான் தங்கச்சிமடத்தில் குடியிருந்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 யை தெரியும். எதிரியை தெரியும். பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். 19.08.2021ம் தேதி மதியம் ஒரு மணியளவில் கடற்கரையில் இருந்து அட்டமால் தெருவில் நடந்து மெயின்ரோட்டிற்க வந்துகொண்டிருந்தேன. அப்போது எதிரியின் கடை பக்கம் அருகே சத்தமாக இருந்தது. பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமா க இருதரப்பினரும் பேசிகொண்டிருந்தார்கள். அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால் நான் பார்த்து'கொண்டிருந்தேன். வாக்குவாத் முற்றிபோய் எதிரி கணேசன் துடைக்கும் மாப்பால் அ.சா.1 மண்டையில் அடித்தார். அதில் அவருக்கு தலையில் இரத்தக்காயம் ஏற்பப்பட்டது. அங்கிருந்தவர்கள் அவரை மருத்துவமனைக்கு போக சொன்னோம். அவர் காவல்நிலையம் சென்றபின்பு போகிறேன் என்று சொன்னார். போலீசார் மருத்துவமனைக்கு போக சொன்னார்கள் அங்கு வந்து காவலர்கள் விசாரிப்பதாக சொன்னார்கள். மருத்துமவனையிலிருந்து அ.சா.1 குடும்பத்திற்கு தகவல் சொல்லிவிட்டு, போலீசார் வந்தபின்பு நான்

சென்றுவிட்டேன். என்னை போலீசார் விசாரித்து பெயர் விலாசம் கேட்டு எழுதி சென்றார்கள்.

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை இதற்கு முன்பாக விசாரிக்கவில்லை. நான் அ.சா1ன் விசைபடகில் மீன்பிடி தொழிலுக்கு செல்வேன் என்றால் 8 வருடத்திற்கு முன்பு சென்றுள்ளேன். அதற்கு பின்பு செல்லவில்லை. கடல் தொழிலுக்கு 8 வருடத்திற்கு முன்பாகதான் சென்றுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்கனவே நகர் காவல்நிலையத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஒரு குற்ற வழக்கு உள்ளது. சம்பவ தினத்தில் இராமேஸ்வரம் கடற்கரைக்கு எதற்காக சென்றேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளனோ என்றால் போலீசார் கேட்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை. சம்பவ தினத்தில் அட்டமால் தெருவில் இருந்து நடந்துதான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அன்றைய தினத்தில் நான் கடற்கரையிலிருந்து அட்டமால் தெருவிற்கு வருவதற்கு என்ன காரணம் என்றால் வீட்டிற்கு போவதற்காக வந்தேன். எனது வீடு கெந்தமான பர்வதத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் கெந்தமான பர்வதம் செல்லவேண்டும் என்றால் கடற்கரையிலிருந்து மேட்டுத்தெரு வழியாக செல்வதுதான் பக்கம் என்றால், மெயின் ரோட்டிற்கு வந்தால்தான் ஆட்டோ போன்ற வாகனத்தில் செல்லமுடியும். 8 வருடத்திற்கு முன்பாக அசா.1 விசைபடகில் கடலுக்கு சென்றதால்தான் அவர் கொடுத்த புகாரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை தேசிய நெடுஞ்சாலையில் வைத்துதான் பார்த்தேன். தேசிய நெடுஞ்சாலையில்தான் சம்பவம் நடந்தது. நான் போவதற்கு முன்பாக வாக்குவாதம் முடிந்து சண்டை முடிந்தது என்றால் நான் போகுமபோதுதான் சம்பவம் நடந்தது. நான் காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 10.10 மணியளவில் சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு 12.45 மணியளவில் வந்தேன். மருத்துவமனைக்கு செல்லும்போது எத்தனைமணி இருக்கும்என்றால் 10 நிமிடத்தில் சென்றுவிட்டேன். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,<br>
மாவட்ட உரிமையியல் மற்றும்<br>
நீதித்துறை நடுவர்,<br>
இராமேஸ்வரம்

//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No:CC.No.202/2022**

**prosecution witness: PW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

Accused absent.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சில்வஸ்டர் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**19.03.2024**

**முதல் விசாரணை:-**

நான் தங்கச்சிமடத்தில் குடியிருந்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். அ.சா.1 எனது மச்சான். 19.08.2021ம் தேதிக்கு 6 நாட்களுக்கு முன்பு எதிரியிடமிருந்து ரூ.5000/- 5 நாட்களுக்குள் திரும்ப தந்துவிடுவமதாக வாங்கியிருந்தேன். 19.08.2021ம் தேதி மதியம் ஒரு மணியளவில் நான் கடல் தொழில் முடித்துவிட்டு அ.சா.1 உடன் வீட்டிற்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் கிளம்பினோம். வரும்போது எதிரி அவரது கடைக்கு வெளிபுறம் நின்றகொண்டிருந்தார்.நான் என் கையில் இருந்த எனது அம்மாவின் கம்மளை காணபித்துஅடகு வைத்து பணத்தை தந்துவிடுவேன் என்று சொன்னேன. அதற்கு அவர் என்னை சுன்னி நோத்தால ஓக்க என்று அசிங்மான வார்த்தைகளால் பேசி ஒழுங்கா திரும்ப தரதெரியாது என்று பேசினார். அதற்கு அ.சா.1 அவரிடம் கையில் பொருள் வைத்துள்ளார். அடகு வைத்து திரும்ப தந்துவிடுவார் என்று சொன்னதற்கு அவரை பார்த்தும் நீ அவனுக்கு என்ன வக்காலத்தா என்று அசிங்கமாக அவரையும் பேசினார். எதிரி கடையில் இருந்த மாப்பால் அ.சா.1யை தலையில் அடித்ததில்

தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. கையை வைத்து தடுத்தபோது உள்ளங்கையிலும் காயம் ஏற்பட்டது. இரண்டு பேரையும் விலக்கவிட்டு வெளியே வந்தோம். உடனே அ.சா.1 என்னையும் அழைத்து கொண்டு அரசு மருத்துவனமனைக்கு தெற்கே உள்ள காவல்நிலையத்திற்கு முதலில் சென்றோம். அங்கு அவர்கள் மருதது வமனைக்கு சென்று சிகிச்சை எடுதது க்கொள்ளுங்கள் அங்குபோலீசார் வருவார்கள் என்று சொன்னார்கள். அதன்பேரில் நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 விடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கி கொண்டார்கள்.

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

நான், அ.சா.1 ம் மற்றும் கடையில் வேலை பார்க்கும்நபர்கள் ஆகியோர் எதிரியின் கடைக்குள் இருந்துதான் பேசிகொண்டிருந்தோம் என்றால் சரிதான். கடைக்குள் பேசிகொண்டிருக்கும்போதுதான் எதிரி என்னிடம் தகாத வார்த்தைகளால் பேசினார் என்றால் சரிதான். நானும், அ.சா.1 ம் ரோட்டில் நின்றுகொண்டிருந்த எங்களை அழைத்தன்பேரில் நாங்கள் கடைக்குள் சென்றோம் என்றால் சரிதான். கடைக்குள் இருந்துகொண்டு வாகனத்தை நிறுத்துவிட்டு வாங்கள் என்று சொன்னதன் அடிப்படையில் நானும், அ.சா.1 ம் கடைக்குள் சென்றோம். கடைக்குள் சென்று 3 நிமிடத்திலேயே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அதன்பின்பு காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டோம். எதிரியின் கடை காவல்நிலையத்திலிருந்து 200 மீ தொலைவில் உள்ளது என்றால சரிதான். சம்பவம் நடந்தவுடன் 01.10 க்கெல்லாம் காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்திலிருந்து மருத்துவமனை செல்லும்போது மணி 01.20 இருக்கும். மருத்துவமனையில் அ.சா.1 சிகிச்சையில் இருக்கும்போது போலீசார் 01.30 மணிக்கெல்லாம் வாக்குமூலம் வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். வாக்குமூலம் வாங்கிவிட்டு போலீசார் உடனே சென்றுவிட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. வாக்குமூலம் வாங்கும்போது நான் அ.சா.1 கூட இல்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து பணம் எந்த தேதியில் வாங்கினேன் என்று எனக்கு தெரியாது. எதிரியின் கடைக்கு தெற்குபுறமாகவும், வடக்கு புறமாகவும் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். கடைக்குள் அ.சா.1, நான், எதிரி மற்றும் கடையில் வேலை பார்க்கும் ஒருவரை தவிர யாரும் இல்லை என்றால் சரிதான். நான் யாருடைய விசைபடகில்

கடலுக்கு சென்றேன் என்றால் என்னடைய விசைபடகில்தான் சென்றேன். அன்றைய தேதியில் விசைப்படகில் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை என்றால் சரிதான். வழக்கமாக இராமேஸ்வரம் கடற்கரையில் அதிகாலை 05, 06 மணிக்கெல்லாம் கடலுக்குள் சென்றுவிடுவார்கள் என்றால் சரிதான். அன்றைய தேதியில் எனது விசைபடகு கடலுக்கு செல்லவில்லை. நான் எதிரியிடம் அதிகமாக ஒரு இலட்சத்திற்கு மேல் வாங்கிவிட்டு திரும்பி கொடுக்கவில்லை என்றும், போலீசார் விசாரணையில் அதை மறைத்து 5000/- என பொயயாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுக்ககூடாதுள ன்ற கெட்ட எண்ணத்தில் அ.சா.1 க்கு விசைபடகில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்

//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No:CC.No.202/2022**

**prosecution witness: PW–1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

Accused absent.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டார்வின் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**19.03.2024**

**முதல் விசாரணை:–**

நான் தங்கச்சிமடத்தில் குடியிருந்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். சம்பவத்திற்கு முன்பு தெரியாது. 19.08.2021 அன்று கடல் தொழிலுக்க சென்றுவிட்டு நானும், சில்வஸ்டரும் இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு வந்துதகொண்டிருந்தோம். மதியம் சுமார் 01.00 மணியளவில் ரவி பாத்திரக்கடை அருகே வரும்போது எனது வாகனத்தை கையை காட்டி எதிரி நிறுத்தினார். எனது பைக் சாவியை ஆப் செய்துவிட்டு எதிரி சில்வஸ்டருக்கு கடனாக கொடுத்திருந்த ரூ.5000 த்தை திரும்ப கேட்டார். 5 நாளில் தந்துவிடுவேன் என்று சொல்லியும், 7 நாள் ஆகியும் தரவில்லையே என்று கேட்டார். அதற்கு சில்வஸ்டர் நான் கையில் நகை வைத்துள்ளேன். வங்கியில் அடகு வைத்து உங்களுக்கு உடனே பணம் தந்துவிடுகிறேன் என்று சில்வஸ்டர் சொன்னார். அதற்கு பணத்தை தராமல் நீ இந்த இடத்தை விட்டு போகமுடியாது என்று சுன்னி நோத்தால ஓக்க என்று அசிங்மாக திட்டினார். அதற்கு நான் தருகிறேன் என்று சொல்கிறரோ எதற்கு திட்டுகிறாய் என்று சொன்னதற்கு, எதிரி என்னையும அதே கெட்டவார்த்தையால் அசிங்கமாக

அவருக்கு நீ என்ன வக்காலத்தாக என்று சொல்லி என்னை மிதித்தார். வண்டி சாவியை கொடுங்கள் நகையை வைத்து பணம் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னதற்கு அவர் நடத்திவரும் பைனான்ஸ் கடைக்குள் சென்று மாப்பால் என்னை தலையில் அடித்ததில் எனக்கு இரத்தம் வந்தது. மறுபடியும் அடிக்க வந்ததபோது வலது கையை வைத்து தடுத்ததில் எனக்கு உள்ளங்கையில் ரத்தக்காயம் ஏற்பட்டது. பக்கத்தில் உள்ளவர்கள் சண்டையை விலக்கவிட்டார்கள். என்னை மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். நான் துறைமுக காவல்நிலையத்திற்கு சென்றேன். அவர்கள் என்னை மருத்துவமனைக்கு செல்ல சொன்னார்கள். நான் அங்கு சிகிச்சையில் இருக்கும்போது போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம்தான் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

நான் 6ம்வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத படிக்க தெரியும். என்னிடம போலீஸ் வாங்கிய புகார் வாக்குமூலத்தில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் கடல் தொழிலுக்கு போய்விட்டுவரும்போது சம்பவம் நடக்கவில்லை கடற்கரைக்கு சென்றுவிட்டுவரும்போது சம்பவம் நடந்தது என்றால் நான் வீட்டிலிருந்து கடல் தொழிலுக்க செல்வதற்காக வந்தேன். எனது வீடு தங்கச்சிமடத்தில் உள்ளது. தங்கச்சிமடத்திலிருந்து இராமேஸ்வரம்வருமபோதுதான் இந்த பிரச்சனை என்றால் சரிதான். இராமேஸ்வரம் வரும்போதுதான் கடைக்கு முன்பு நின்று எதிரி என்னை கூப்பிட்டார் என்றால் சரிதான். 6ம்நம்பர் லைன் தெருவில் இருந்து தேவர்சிலையிலிருநது வடக்கு பக்கமும், தெற்குபக்கமும் உள்ள பகுதிதான் 6ம்நம்பர் பகுதி என்றால் சரிதான். 6ம்நம்பர் பகுதி முடியும் இடத்தில் தெற்குபக்கத்தில் துறைமுகம் போகும் ரோடு உள்ளது என்றால் சரிதான். தங்கச்சிமடத்திலிருந்து இராமேஸ்வரம் வரவேண்டும என்றால் வடக்க பக்கத்திலிருந்து தெற்குநோக்கிதான் வரவேண்டும். துறைமுகம் போகும் ரோடுடன் 6ம்நம்பர் லைன் முடிந்துவிடும் என்றால் சரிதான். அதன்பின்பு தெற்குபக்கம் என்.எஸ்.கே.வீதி உள்ளது. 6ம்நம்பல் லைனில் எதிரியின் கடை இல்லை என்றால் சரிதான். என்.எஸ்.கே வீதிக்கு எதிர்புறம் மேற்கே மாந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். ரவி பாத்திரக்கடை 6ம்நம்பர் லைனில் இருந்து

வடக்கு பகுதியில் கடைசி கடையாக உள்ளது என்றால் சரியல்ல. 6ம்நம்பர் லைனில் நான் சொல்வதுபோல் ரவி பாத்திரக்கடை நடுபகுதியில் உள்ளது. ரவி பாத்திரக்கடைக்கு வடக்கு புறமும், தெற்குபுறமும் யார் கடை வீடு உள்ளது என்றால் வடக்கு பக்கம் பிரகாஷ் என்பவரின் மெக்கானிக் கடை உள்ளது– அதற்கும் தெற்கே களஞ்சியம், குணா வீடு உள்ளது. அனைத்தும் 6ம் நம்பர் லைனில்உள்ளது என்றால் சரிதான். ரவி என்பவர் பழைய இரும்புகளை வாங்கி வியாபாரமும் மற்றும் பழைய மீன்வலைகளை வாங்கி வெளியூருக்கு ஏற்றுமதி செய்து வருகிறார். அவர் பாத்திரக்கடை வைக்கவில்லை என்றால் சரிதான். நான் தங்கச்சிமடத்தில் இருந்து நேரடியாக கடற்கரைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எத்தனை மணியளவில் சென்றேன் என்றால் 11.00 மணி இருக்கும். எதிரியின் கடையை தாண்டிதான் கடற்கரைக்கு சென்றோம் என்றால் இல்லை. சம்பவத்திற்கு முதல்நாள் செவ்வாய்கிழமை என்றால் சரிதான். இராமேஸ்வரம் கடற்கரையில் திங்கள், புதன் , சனி ஆகிய நாட்களில்தான் மீன்பிடிக்க கடலுக்குள் செல்வோம் என்றால் சரிதான். அன்றைய நாட்களில் கடற்கரைக்கு அதிகாலை 4 மணிக்கெல்லாம் வந்துவிடுவோம் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் வரவில்லை. நான சம்பவதன்று எனது மைத்துனர் சில்வஸ்டருடன் இராமேஸ்வரம் கடற்கரை பகுதிக்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் கடல் தொழிலுக்கு சென்றிருந்தால் மீன்பிடி டோக்கன் வழங்கியிருப்பார்கள் என்றால் சரிதான் அன்று நான் டோக்கன் வாங்கவில்லை. நான் அன்றைய தேதியில் வழக்கமாக எந்த விசைபடகில் மீன்தொழிலுக்கு செல்வேன் என்றால் எனக்கு சொந்தமான விசைப்படகில் மீன்பிடிக்க செல்வேன். நான் சம்பவத்தன்று மீன்பிடிக்க கடலுக்கு சென்றுவிட்டேன். சம்பவ நேரத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. எனது விசைபடகில் நான் கடலுக்கு போகும்போது ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி நான் கடற்கரைக்கு வந்தபிறகு எனது மைத்துனர் எதிரிக்கு பணம் கொடுக்கவேண்டாம் என்ற கெட்ட எண்ணத்தில் மருத்துவமனையில் சிகிச்சை சென்றேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தன்று எதிரியின் கடைக்குள் உட்கார்ந்து பேசினேனா என்றால் இல்லை. எதிரியின் கடை என்.எஸ்.கே வீதியின் எதிரே உள்ள மாந்தோப்பில் உள்ளது என்றால் இல்லை. சம்பவத்தன்று அக்கம் பக்கத்தில் சில நபர்கள் இருந்தார்கள் அவர்களுக்கு சம்பவத்தை பற்றி தெரியும் என்றால் சரிதான. நான் சம்பவத்திற்கு பின்பு துறைமுக காவல்நிலையத்திற்கு எவ்வளவு நேரத்தில் சென்றேன்

என்றால் 01.30 மணிக்கு காவல்நிலையம் சென்றேன். 01.35 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன். சம்பவம் அரைமணிநேரம் நடந்ததா என்றால் இருக்கும். காவல்நிலையத்தில் எனக்கு மருத்துவ மெமோ கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. நான் 01.35 மணிக்கெல்லாம் மருத்துவரை பார்த்துவிட்டேன் என்றால் சரிதான். மருத்துவ சிகிச்சைக்கு பின்பு துறைமுக காவல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு போலீசார் வந்தார்கள் என்றால் 02.00 மணிக்கு வாககுமூலம் வாங்கினார். மருத்துவமனையில் இரண்டு போலீசார் இருந்தார்கள் யார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு முன்பு எத்தனை நாட்கள் முன்பு எந்த தேதியல் எனது மைத்துனர் எதிரியிடம் பணம் வாங்கினார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எந்த தேதியில் எனது மைத்துனர் எதிரியிடம பணம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எனக்கு வலது கையில் ஏற்பட்ட காயத்தை மருத்துவரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் பொதுவாக கடல் தொழிலுக்கு போகும்போது எந்தவொரு தங்க ஆபரமும் எடுத்துசெல்லமாட்டேன் என்றால் சரிதான். எனது மைத்துனரும் தங்க ஆபரமும் எடுத்துசெல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் மருத்துவமனை சிகிச்கைக்கு பிறகு என்னை விசாரிக்கவில்லை. மருத்துவமனை சிசிக்சைக்கு ஒத்துழைக்காமல் தானாகவே ஓடிவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் பணத்தை வாங்கிவிட்டு ஏமாற்றவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் விசைபடகில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொ டுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்